18.12.2019

**பத்திரிக்கை செய்தி**

**18.12.2019 முதல் 01.01.2020 வரை 10 நாட்கள் மெட்ரோ இரயில் நிலையங்களில் மெட்ரோ இசை நிகழ்ச்சி**

மெட்ரோ இசை நிகழ்ச்சி 2019-ஐ கொண்டாடும் வகையில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சென்னை முழுவதும் உள்ள பல இசை கலைஞர்களுடன் இணைந்து டிசம்பர் 18 முதல் ஜனவரி 1, 2020 வரை சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்க உள்ளது. இதனையொட்டி இன்று (18.12.2019) கோயம்பேடு மெட்ரோ மற்றும் சென்ட்ரல் மெட்ரோ நிலையங்களில் இசைக்கருவிகளை கொண்டு பின்வரும் இசை நிகழ்ச்சிகள் நடைப்பெற்றன.

1. கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையத்தில் மாலை 6 மணி முதல் 8 மணி வரை அன்விண்ட் இசை பள்ளியின் இசை நிகழ்ச்சி, மற்றும்
2. சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் மாலை 6 மணி முதல் 8 மணி வரை டிரம்ஸ் முரளி குழுவின் இசை நிகழ்ச்சி.

எம்.ஓ.பி வைஷ்ணவ மகளிர் கல்லூரி மாணவர்கள் யுனிசெஃப் உடன் இணைந்து நாளை (19-12-2019) குழந்தை உரிமைகள் குறித்த ஒரு குறுகிய தெரு நாடகத்தை அலந்தூர் மெட்ரோ (பொத்ததளம்) மற்றும் திருமங்கலம் மெட்ரோ (பொத்ததளம்) நிலையங்களில் மாலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை நடத்த உள்ளனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் இசை கலைஞர்களுடன் இணைந்து பலவகையான மெட்ரோ இசை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது.

**கலை நிகழ்ச்சிகளின் அட்டவணை:**

| தேதி | கலை நிகழ்ச்சி பள்ளியின் பெயர் | மெட்ரோ நிலையத்தின் பெயர் | நேரம் | கலை நிகழ்ச்சி விவரம் |
|---|---|---|---|---|
| 19.12.2019 | எம்.ஓ.பி வைஷ்ணவ மகளிர் கல்லூரி | ஆலந்தூர் மெட்ரோ (பொதுத்தளம்) திருமங்கலம் மெட்ரோ (பொதுத்தளம்) | மாலை 6 – 7 மணி | யுனிசெஃப் உடன் இணைந்து குழந்தை உரிமைகள் குறித்த இசை நிகழ்ச்சி |

| | | | | |
|---|---|---|---|---|
| 20.12.2019 | ஷ்ருதி பாலகிருஷ்ணன் | அசோக் நகர் மெட்ரோ | மாலை 6 – 8 மணி | பரதநாட்டியம் |
| 21.12.2019 | ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை | மெட்ரோ இரயிலில் கலை நிகழ்ச்சி<br><br>சென்ட்ரல் மெட்ரோ | மாலை 4.30 – 5.30 மணி<br><br>மாலை 6 – 7 மணி | தமிழ் இசை நிகழ்ச்சி |
| 21.12.2019 | கலையகம் | கிண்டி மெட்ரோ | மாலை 6 – 8 மணி | தப்பாட்டம் |
| 22.12.2019 | கலையகம் | பரங்கி மலை மெட்ரோ | மாலை 6 – 8 மணி | தப்பாட்டம் |
| 23.12.2019 | ஆன்மஜோதி | சென்ட்ரல் மெட்ரோ | மாலை 6 – 8 மணி | பரதநாட்டியம், நாதஸ்வரம் |
| 27.12.2019 | டிரமாலையம் | அசோக் நகர் மெட்ரோ | மாலை 6.30 – 7.30 மணி | தப்பாட்டம் |
| 27.12.2019 | பீட் சாயர் | அசோக் நகர் மெட்ரோ | மாலை 7.30 – 8.30 மணி | இசை நிகழ்ச்சி |
| 25.12.2019 | கலையகம் | அண்ணா நகர் கிழக்கு மெட்ரோ | மாலை 6 – 8 மணி | தப்பாட்டம் |
| 01.01.2019 | கலையகம் | வடபழனி மெட்ரோ | மாலை 6 – 8 மணி | தப்பாட்டம் |

கலை நிகழ்ச்சிகளுக்கான அனுமதி இலவசம். சென்னை மாநகரில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் மெட்ரோ இரயில் நிலையங்களில் 10 நாட்கள் நடைபெறும் இசை மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை கண்டு களித்து சிறப்பிக்குமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.